**2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருட்கள்**

**1.** திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26458/2016/தி1- 2, நாள்.25.09.2017, அரசாணை நிலை எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள்.13.04.2017ன் படி இம்மாநகரட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளிகளில் மலம் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை குறைத்திடும் / மறுசுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பணிக்காக 2 வார்டுகளுக்கு 1 பரப்புரையாளர் விதம் 48 வார்டுகளுக்கு 24 பரப்புரையாளர்கள், 4 மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் போன்றோர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் நியமித்திடவும், மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டில் 75% மத்தியஅரசு நிதி + 25% மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடுகளின்படி ஒப்பந்த அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பணியாளர்களை நியமனம் செய்திடவும்,விழிப்புணர்வு ஏற்படுத்து பணியினை உரிய முறையில் நடைமுறைப்படுத்திடவும் தெரிவிக்கப்பட்டு அதன்படி 03.09.2017 முதல் 03.09.2018 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. பின்னர் மேலும் 03.12.2018 வரை 3 மாத காலத்திற்கு ஒப்பந்தபணி நீட்டித்து வழங்கப்பட்து. பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.P1/26458/2016, நாள்.13.11.2018ன் படி மேற்கண்ட பணிக்காலம் 03.09.2019 வரை ஓராண்டு காலத்திற்கு மேலும் காலநீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. அதன் பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.P1/26458-1/2016, நாள்.11.09.2019ல் தெரிவித்துள்ளதன் படி மீண்டும் அதே ஸ்கைமேன் பவர் ஏஜென்சி, திண்டுக்கல் நிறுவனத்திற்கு 31.03.2020வரை காலநீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.26458-1/2016P1 நாள்.30.03.2020ல் தெரிவித்துள்ளதன் படி மீண்டும் அதே நிறுவனத்திற்கு 30.06.2020 வரை காலநீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. அதன் பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.26485/2018/P1, நாள்.29.06.2020ன் படி மேற்கண்ட நிறுவனத்திற்கு 30.09.2020 வரை ஒப்பந்த பணிக் காலத்தை நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட பணிக்காலம் 30.09.2020 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.26458/2018/P1 நாள்.24.07.2020ல் மேற்காணும் விழிப்புணர்வு பணிக்கு 01.10.2020 முதல் 31.03.2021வரையான 6 மாதகாலத்திற்கு அல்லது 15வது நிதிக்குழுவின் பரிந்துரை பெறும்வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரையான காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.29,72,000/- (ESI & EPF உட்பட) மதிப்பீட்டில் ஒப்பந்த புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 24 பரப்புரையாளர்கள் (கல்வித்தகுதி 12ம் வகுப்பு), 4 மண்டல மேற்பார்வையாளர்கள் (கல்வித்தகுதி B.A.,Sociolgy) மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர்(M.A., Sociolgy / MSW)

ஆகியோர்களை ஒப்பந்த அடிப்படையில் பரப்புரையாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.475.35 (ESI & EPF உட்பட), மண்டல மேற்பார்வையாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.651.33(ESI & EPF உட்பட) ஒரு ஒருங்கிணைப்பாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.711.88 (ESI & EPF உட்பட)ஒப்பந்தப் புள்ளிகோரி ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும், அவ்வாறு ஒப்பந்தப் புள்ளி கோருவதற்கான விளம்பரம் மற்றும் செய்தி மலரில் வெளியிடுவதற்கான கட்டண செலவினம் ரூ.2,00,000/-ஐ மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.26458/2018/P1 நாள்.24.07.2020ஐ மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அறிவுறுத்தலின்படி மேற்காணும் தூய்மை இந்தியா திட்டத்தன் கீழ் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு அயல் ஒப்பந்த அடிப்படையில் பணிமேற்கொள்ளவும், மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டில் 75% மத்தியஅரசு நிதி + 25% மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடுகளின்படி ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி 01.10.2020 முதல் 31.03.2021 வரை அல்லது 15வது நிதிக்குழு பரிந்துரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரையான காலத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோர மாமன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கு விளம்பரக்கட்டணம் மற்றும் செய்தி மலரில் வெளியிடுவதற்கான கட்டணம் ஆகியவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ஐ மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற் கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2071 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**2.** திண்டுக்கல் மாநகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தில் தென்பகுதியின் கிழக்கு பக்கத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளிக்கும் அறை கட்டண வசூல் செய்யும் உரிமம் மற்றும் தெற்கு பகுதியில் 6 சிறுநீர் கழிக்கும் இடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை திருமதி.வி.சகிலா (பவர்) ஏ.வேல் ராஜ் பாபு என்பவருக்கு 2018-19ம் ஆண்டிற்கு உரிம கட்டணம் ரூ.27,00,000/- மாமன்றம் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி நபர் மேற்படி கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் பொழுது 6 சிறுநீர் கழிக்கும் கழிக்கும் இடத்திற்கு கட்டணம் வசூல் செய்யக் கூடாது என மாநகராட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி நபர் தனக்கு நஷ்டம் ஏற்படுவதாக கூறி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை திருப்பி வழங்குமாறு WP (MD) No.5946/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நிலையில் மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் எதிர்வாதுரை தாக்கல் செய்த போது 2017-18ம் ஆண்டு

ஏலத் தொகை ரூ.11,70,000/- ல் 20% உயர்வு செய்து உரிமத்தினை ஒப்படைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு 03.04.2019ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பின்படி 2018-19ம் ஆண்டிற்கு 20% உயர்வு செய்தும் மற்றும் அரசாணை எண்.181ன் படி உயர்வு செய்யப்பட்ட தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% உயர்வு செய்து கேட்பு எழுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.15935/2018/அ7)

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

நீதிமன்ற தீர்ப்பின் படி கேட்பு எழுப்பிடஅனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்: 2072 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**</u>

**3.** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நத்தம் ரோடு தென்புறம், பர்மா காலனி அருகில் வார்டு எண்.6, பிளாக் எண். 39, நகரளவு எண். 1901/2-ல் உள்ள சுமார் 45 செண்ட் நிலத்தில் புதிதாக மனைப்பிரிவு அமைக்க திருமதி. டி. உமையாள், என்பவர் விண்ணப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை வடிகால் வசதிகளுடன் கூடிய சாலை அமைத்தும் தெரு விளக்குகள் அமைத்தும் தானப்பத்திரம் மூலம் சாலையினை மாநகராட்சிக்கும், மின்சார வாரியத்திற்கும் இடத்தினை ஒப்படைக்க கோரி உறுப்பினர், செயலாளர் திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண். 570/2020/டி.எல்.பி.ஏ., நாள்.07.08.2020, -ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மனை உரிமையாளர் திருமதி. டி. உமையாள் என்பவர் தானப்பத்திரம் ஆவண எண். 4004/2020, நாள். 27.02.2020-ம் தேதி பதிவு செய்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி, மனைப்பிரிவில் அமைக்கப்பட சாக்கடை வசதி, சாலைவசதி, தெருவிளக்கு வசதிகள், அரசு விதிமுறைகளின் படி முறையாக அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி மனைக்கு அங்கீகாரம் வழங்கலாம் என மாநகராட்சி செயற்பொறியாளரால் 28.08.2020-ம் தேதியன்று சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், நகரசார் ஆய்வாளர் 28.08.2020-ம் தேதிய குறிப்பில் மேற்படி, மனைப்பிரிவு புலத்தணிக்கை செய்ததில் நான்கு பக்கம் உள்ள புல எல்லைகளும் நகரளவு ஆவணங்களின் படி சரியாக உள்ளது எனவும், வரைபடத்தின் படி சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது என குறிப்பு அளித்துள்ளார். எனவே, மாநகராட்சி செயற்பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை மற்றும் வடிகால்களை மாநகராட்சி எடுத்துக்கொண்டு பராமரிப்பு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5019/2020/எப்1)**

<u>**அலுவலக குறிப்பு..**</u>

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நத்தம் ரோடு தென்புறம், பர்மா காலனி அருகில், வார்டு எண்.6, பிளாக் எண். 39, நகரளவு எண். 1901/2-ல் புதிதாக அங்கீகரிக்கப்பட உள்ள மனையில் அமைந்துள்ள சாலை மற்றும் வடிகாலினை

மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2073 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**4.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்க நீருந்து நிலையத்தில் (New Scheme) 120 HP மின் மோட்டார் பம்ப், (Old Scheme) நீருந்து நிலைய மோட்டாரிலிருந்து நீர் திறக்கும் சுலீஸ் வால்வு, Gun Metal ஸ்பிண்டில் ராடு பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு ரூ.0.70 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 11658 / 2019 / இ 4)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) குடிநீர் நிதி 2020-21 ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மானம் எண்: 2074 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**5.** திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பிரிவில், சிப்பம் –I க்கு உட்பட்ட வார்டு எண்.27, ஆர்.எஸ். ரோட்டில் உள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய் (R.C.C 200mm dia ) சேதமடைந்துள்ளதால், அக்குழாயின் வழியே கழிவுநீர் செல்லாமல், பின்நோக்கி செல்வதால் அப்பகுதியின் அருகில் உள்ள வணிகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் கழிவுநீர் பின்நோக்கி செல்கிறது. மேலும், அப்பகுதியில் உள்ள CHAMBER வழியே கழிவுநீர் வெளியேறி துர்நாற்றம் வீசுகிறது. எனவே, பொது சுகாதாரம் பாதிக்காமல் இருக்க சேதமடைந்த கழிவுநீர் பிரதான கால்வாயினை புதியதாக மாற்றி அமைக்கும் பணிக்கு மற்றும் அங்கு விலாஸ், கவாடக்காரத்தெரு பகுதியில் கழிவுநீர் சேகரிப்பு அமைக்கும் பணிக்கு ஆகும். உத்தேச செலவீனம் ரூ.7.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 5917/2020/இ4)**

**அ.குறிப்பு**

இதற்கான செலவீனத்தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2075 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**6**. திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் பழைய பழுதடைந்த அங்கன்வாடி மையக் கட்டிடங்களை இடித்து இடிபாடுகளை அகற்றி அதில் உள்ள தளவாட சாமான்களை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அங்கன்வாடி மையங்களின் விபரம் |
|---|---|
| 1 | கருணாநிதி நகர் |
| 2 | குமரன் திருநகர் |
| 3 | ஆரோக்கிய மாதா தெரு, வி.எம்.ஆர்.பட்டி |
| 4 | ஆரோக்கிய மாதா தெரு, போடிநாயக்கன்பட்டி |

| | |
|---|---|
| **5** | மேற்கு மரியநாதபுரம் புதுத் தெரு |
| **6** | மேற்கு ரதவீதி, காமராஜபுரம் |

( ந.க.எண். 8247 / 2020 / இ4)

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தொடரப்படும் மேல்நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2076 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**7**. இம்மாநகராட்சியில் பொது நிதி 2020-21 ன் கீழ் காமராஜர் சாகர் அணையில் உள்ள பழுதடைந்த VACCUM PUMP களை மாற்றம் செய்து புதிய VACCUM PUMP களை பொருத்தும் பணிக்கு 20.08.2020 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எ ண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | விஜயன் எண்டர்பிரைசஸ், சென்னை | 0.63% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.1600/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2. | ஆல்செம் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் | 18.75% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.1600/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண். 11658 / 2019 / இ 4 )

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ரூ.1,60,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். நாள் .2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.63% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விஜயன் எண்டர்பிரைசஸ், சென்னை, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2077அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**8.** இம்மாநகராட்சியில் பொது நிதி 2020-21 ன் கீழ் காந்தி மார்க்கெட்டில் மின் இணைப்புகள் பெறுதல் மற்றும் மின் இணைப்புக்கான வயரிங் வேலைகள் செய்யும் பணிக்கு 13.08.2020 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எ ண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | எஸ்பிடி பில்டர்ஸ் | 4.95% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.15000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2. | திரு.ஜி.உதயகுமார் | 10.00% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.15000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண். 11658 / 2019 / இ 4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1. ரூ.15,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத்தின் முன் அனுமதி நாள் .2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றதால் விலை விகிதத்தை குறைத்து தருமாறு கூடுலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்திருந்த எஸ்பிடி பில்டர்ஸ் ஒப்பந்ததாரரிடம் 18.08.2020 ம் தேதிய அறிவிப்பில் கேட்கப்பட்டபோது ஷையார் விலைவிகிதத்தினை குறைத்து தர இயலாதென தெரிவித்ததன் காரணமாகவும், பணியின் அவசர அவசியம் கருதியும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.95% மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எஸ்பிடி பில்டர்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம

**தீர்மானம் எண்: 2078அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**9.** இம்மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2020-21 ன் கீழ் வார்டு எண். 8, கிழக்கு கோவிந்தாபுரம் நாயக்கர் புது 2 வது தெருவில் நியாய விலைக் கடை கட்டும் பணிக்கு 28.08.2020 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.ஜி.அகிலாம்பாள் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.4500/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2. | திரு.எ.நாட்ராயன் | 12.00% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.4500/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண். 3053 / 2020 / இ 4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1. ரூ.4,50,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். நாள் .2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஜி.அகிலாம்பாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2079 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**10.** திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஏற்கனவே உள்ள வாகனங்களுடன் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2018-19ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிதாக வாங்கப்பட்ட 13 டாடா ஏசிஇ வாகனங்களை இயக்குவதற்கு இம்மாமன்ற தீர்மான எண். 1913, நாள் - 22.04.2020ன் படி 01.04.2020 முதல் மூன்று மாதகாலத்திற்கு (30.06.2020 வரை) 11 ஓட்டுநர்களை ஏற்கனவே இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கனரக வாகன ஓட்டுநர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்து வரும் திரு. ஏ. இராமலிங்கம், PWD ஒப்பந்ததாரர், அய்யம்பாளையம் என்பவர் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களது 27.06.2019ம் நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண்.8698/2019/எப்5ன் படி நாள் ஒன்றுக்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.577/- வீதம் விநியோகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு அதன்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட அனுமதி காலம் 30.06.2020 உடன் முடிவடைவதாலும், தற்போது கொரேனா நோய்தொற்று தடுப்பு பணி காரணமாக உடனடியாக ஒப்பந்தப் புள்ளி கோரி பணி மேற்கொள்வது இயலாது என்பதாலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 3 மாத காலத்திற்கு (01.07.2020 முதல் 30.09.2020 வரை) 11 கனரக வாகன ஓட்டுநர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தரவிலைப் பட்டியலில் கண்டுள்ள விலை (நாள் ஒன்றுக்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.577/- வீதம்) விகிதப்படி அயல் ஒப்பந்த அடிப்படையில் திரு. ஏ. இராமலிங்கம், PWD ஒப்பந்ததாரர், அய்யம்பாளையம் என்பவர் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/- ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3270/2020/எச்2)

**அலுவலக குறிப்பு** :

1. தற்போதைய சூழ்நிலையில் கொரோன நோய்த்தொற்று தடுப்பு பணி நடவடிக்கையின் காரணமாக உடனடியாக ஒப்பந்த புள்ளி கோரி வாகனங்களை இயக்குவது இயலாது என்பதால் ஏற்கனவே இம்மாநகராட்சிக்கு கனரக வாகன ஓட்டுநர்களை விநியோகம் செய்து வரும் திரு. ஏ. இராமலிங்கம், PWD ஒப்பந்ததாரர், அய்யம்பாளையம் என்பவர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தரவிலைப் பட்டியலில் கண்டுள்ள விலை (நாள் ஒன்றுக்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.577/- வீதம்) விகிதப்படி அயல் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2020 முதல் 30.09.2020 வரையான காலத்திற்கு 11 கனரக வாகன ஓட்டுநர்களை விநியோகம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி 01.07.2020 முதல் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/- ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2080 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**11.** இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 451 தூய்மைப் பணியாளர்களின் பணியிடமானது கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பாக அனுமதிக்கப்பட்டதாகும். தற்போது திண்டுக்கல் நகராட்சி, மாகநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டடு, மக்கள் தொகை 2,07,000 ஆகவும் மாநகரில் நிலையான குடும்பங்களின் எண்ணிக்கை 54,000க்கும் கூடுதலாக உயர்ந்துள்ள நிலையில்

அதற்கேற்றவாறு அரசு நிர்ணயத்துள்ள அளவுகோளின் படி தேவையான பணியாளர்களை பணியமர்த்தி பொதுமக்களின் நலனையும், பொதுசுகாதாரத்தையும் முறையாக பராமரித்து பேணிகாப்பது மிக அவசியமும், அத்தியாவசிமானதும் ஆகும். தற்பொழுது மாநகர பகுதிகளில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மாநகரில் சுகாதாரத்தை பேணி மிக கவனத்துடன் பேணிக் காக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு வருகிறது. மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை செம்மையாக செயல்படுத்தவேண்டிய நிலையும் உள்ளது. இந்நிலையில் அரசாணை எண் 101/97ல் வழங்கப்பட்டுள்ள அளவுகோளின் படி இம்மாநகராட்சிக்கு தேவையான தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 677 ஆகும். தற்போது மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் 160 மட்டுமே ஆகும். இந்நிலையில் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் 226 மற்றும் 50 தூய்மைப் பணியாளர்கள் தனியாகவும் பணியமர்த்தப்பட்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது நிர்வாக அனுமதியில் 278 தூய்மைப் பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ளவும் அவ்வப்போது மாநகராட்சியில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு தகுந்தவாறு கூடுதலாக தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையிலேயே பணியமர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 19.02.2020அன்று 281 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை விநியோகம் செய்ய 4 சிப்பங்களாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில் 211 பணியாளர்களுக்கான 1,2 மற்றும் 3 ஆகிய சிப்பங்கள் மட்டுமே தகுதியுடன் ஏற்றுக்கொள்ள தக்கதாக இருந்தது. எனவே, இம்மூன்று சிப்பங்களுக்கும் 01.08.2020 முதல் பணி மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, 70 தூய்மைப் பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கான 4 வது சிப்பத்திற்கு 03.08.2020 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு 04.08.2020 அன்று திறக்கப்பட உள்ளது. இந்நிலையில் தூய்மைப் பணிகளில் எவ்வித சுனக்கமும் இன்றி பணி மேற்கொள்ள ஏதுவாக தனியாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள 50 பணியாளர்களை விநியோகம் செய்யும் ஒப்பந்த காலமானது 31.07.2020 உடன் முடிவடையவுள்ளது. எனவே, 4-வது சிப்பத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகளின் மீது இறுதி நடவடிக்கை மேற்கொண்டு பணி ஆணை வழங்கும் வரை மேற்கண்ட 50 பணியாளர்களுடன் பற்றாக்குறை ஏற்படும் 20 பணியாளர்களை சேர்த்து மொத்தம் 70 பணியாளர்களை விநியோகம் செய்யவும், இந்த ஒப்பந்த காலத்தினை 4- வது சிப்பத்திற்கு பணி ஆணை வழங்கும் வரை அல்லது 01.08.2020 முதல் 30.09.2020 வரையான 3 மாத காலத்திற்கு மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம்)ஐ மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது. (ந.க.எண்.15584/2015/எச்2)

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>

1) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.எண்.7139/ஜெ3/2019 நாள் 07.01.2020ல் 278 தூய்மைப் பணியாளர்களை அயல்

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும், தொடர்ச்சியாக தூய்மைப் பணியாளர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில் அப்பணியிடங்களையும் அயல் ஒப்பந்த அடிப்படையிலேயே நிரப்பிக் கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, 281 தூய்மைப் பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரி பரிசீலனை செய்யப்பட்டதில் 211 தூய்மைப் பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கான 1, 2 மற்றும் 3 ஆகிய 3 சிப்பங்கள் மட்டுமே தகுதியின் அடிப்படையில் இம்மாநகராட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 01.08.2020 முதல் பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது. 70 தூய்மைப் பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கான 4 வது சிப்பத்திற்கு 03.08.2020 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் 4வது சிப்பத்திற்கான ஒப்பந்தப் புள்ளியின் மீது நடவடிக்கை மேற்கொண்டு பணி ஆணை வழங்கும் வரை சுகாதாரப் பணியில் எவ்வித பாதிப்புமின்றி 01.08.2020 முதல் தொடர்ந்து தூய்மைப் பணி மேற்கொள்ள ஏதுவாக ஏற்கனவே 50 தூய்மைப் பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்து வரும் எச்செல் நீட் அண்ட் டைடி, திண்டுக்கல் நிறுவனத்தாரே 50 தூய்மைப் பணியாளர்களுடன் பற்றாக்குறை ஏற்படும் 20 தூய்மைப் பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் 70 தூய்மைப் பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணியினை 4வது சிப்பத்திற்கான பணி ஆணை வழங்கும் வரை அல்லது 01.08.2020 முதல் 31.10.2020 வரை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட 70 தூய்மைப் பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவின்ம் ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம்)ஐ மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2081 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**12.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017, 29.08.2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படியும், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 ஆகியவற்றில் இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட 54000 குடியிருப்புகளுக்கு மேல் உள்ளதால் 173 நபர்கள் தேவைப்படுகிறது. எனவே, 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தரவிலைப் பட்டியலின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 296/- என்ற விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் , திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக 26.08.2019 முதல் 30 நாட்களுக்கு ஒரு முறை கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கோடைக்காலத்தில் களப்பணிக்யாளர்கள் அதிகம் தேவையில்லை என்பதால் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களை வைத்து பணி மேற்கொண்டதால் 3 மாதத்திற்கு ஆகும் செலவினம் முந்தைய காலத்தில் மாமன்ற அனுமதியில்

பெறப்பட்ட ரூ.19,00,000/- க்குள்ளாகவே ஏற்படும் என்பதால் 23.04.2020 முதல் 22.07.2020 வரையன காலத்திற்கு பணி மேற்கொள்ள இம்மான்ற தீர்மான எண்.1912, நாள்.22.04.2020ன் படி அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 22.07.2020 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதாலும், தற்போது மழைக்காலம் தொடங்கி விட்டதால் டெங்கு தடுப்புப் பணிக்கு தற்போது குறைந்த பட்சம் 100 முதல் 110 வரையான பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2 மாதத்திற்காகும் செலவினம் ஏற்கனவே முந்தைய மாதங்களில் அனுமதி பெற்று வந்த செலவினத் தொகையான ரூ.19,00,000/-க்கு உள்ளாகவே மேற்கொள்ளும் வகையிலும், , நிர்வாக இடர்பாடுகளை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி பணி ஒப்பந்த காலத்தினை 23.07.2020 முதல் 22.09.220 வரை மேலும் 2 மாத காலத்திற்கு ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டுவரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.19,00,000/- இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7983/2019/எச்2)

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும், ஒவ்வொரு முறையும் பெறப்படும் தொகைக்கான அனுமதிக்குட்பட்டே 100 முதல் 110 வரையான பணியாளர்களை வைத்தே குறிப்பிட்ட தொகைக்குள் பணி மேற்கொள்ளவிருப்பதாலும் மேலும் 2 மாத காலத்திற்கு ஏற்கனவே இப்பணியினை செய்து வரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம் ஒப்பந்ததாரரையே தொடர்ந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 2082 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**13.** திண்டுக்கல் நகராட்சி 2014 ம் ஆண்டு முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் மற்றும் பிற அபிவிருத்திப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயார் செய்தல், பிரேரரணைகள் தயார் செய்தல், மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகளை இணையதளத்தில் பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்தல் மற்றும் அவ்வப்போது நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கேட்கப்படும் விபரங்களை தயார் செய்தல் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு கணினி தெரிந்த தட்டச்சர் தேவைப்படுகிறது. எனவே கணினி தெரிந்த தட்டச்சர் ஒருவரை ( 1 எண்ணம்) Out Sourcing மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண். 8698 / 2019/ எப் 5, நாள் 27.6.2019 ல் 2019-20 ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதப்படி ஒரு வருடத்திற்கு (அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கு செலுத்தப்பட வேண்டிய EPF & ESI ஆகியவற்றுடன்) 1.10.2020 முதல் 30.9.2021 வரை பணியமர்த்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 10312 / 2017/ இ 3)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி பொது நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 2083 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**14.** திண்டுக்கல் நகராட்சி 2014 ம் ஆண்டு முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாநகராட்சி அலுவலகத்தில் காவல் பணிகள் மேற்கொள்ள காவலர்கள் 3 எண்ணம் தேவைப்படுகிறது. பணியாளர்கள் பற்றாக்குறையின் காரணமாக வெளிச்சந்தை முறையில் (Out Sourcing) மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களால் 2020-21ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதப்படி ( அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கு செலுத்தப்பட வேண்டிய EPF & ESI ஆகியவற்றுடன்) ஒரு வருடத்திற்கு 1.11.2020 முதல் 31.10.2021 வரை பணியமர்த்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 10312 / 2017/ இ 3)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி பொது நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2084 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**15.** திண்டுக்கல் மாநகராட்சியில் COVID 19 கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றது. திண்டுக்கல் மாநகராட்சியில் COVID 19 கொரோனா வைரஸ் தொற்று நோய் உள்ளதா? என்பது குறித்து சோதனை மேற்கொள்ள பழனி சாலை நகர் நல மையத்தில் (Palani Road Urban Health Centre) அலுமினியத்தால் ஆன 6’x4’ அளவுள்ள தடுப்பறை கட்டும் பணிக்கு ஒப்புதல் வேண்டப்படுகின்றது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.25000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப் பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் ரூ.20000/- க்கு (GST நீங்கலாக) குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள காளீஸ் எண்டர்பிரைசஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் மேற் கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.3063 / 2020 / இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் தமிழ்நாடு நகராட்சி விதி எண்.15 ன் கீழ் இப் பணியை மேற்கொள்ள ஒப்புதல் வேண்டப்படுகின்றது. இப் பணிக்கான செலவுத் தொகையினை வருவாய் நிதி 2020-21 லிருந்து மேற்கொள்ளவும், COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதி கூடுதலாக பெறப்படின் அந் நிதியிலிருந்து ஷை தொகையை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4) இப் பணியினை மேற்கொள்ள ரூ.20000/- க்கு (GST நீங்கலாக) குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள காளீஸ் எண்டர்பிரைசஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் வசம் பணியினை ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2085 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**16.** திண்டுக்கல் மாநகராட்சியில் COVID 19 கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றது.இப் பணியில் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகம், கமலா நேரு நகர்நல மருத்துவமனை,காமராஜர் பேருந்து நிலையம், மரியநாதபுரம் நகர்நல மையம், பூச்சிநாயக்கன்பட்டி நகர் நல மையம் ஆகிய பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக கைகளை சுத்தமாக கழுவும் பொருடட்டு காலால் இயக்கும் வண்ணம் 6 எண்ணம் Wash Basin மற்றும் அதற்கான குழாய்கள் பொருத்தும் பணிக்கு ஒப்புதல் வேண்டப்படுகின்றது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.35000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப் பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் ரூ.33000/- க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள பி.எம்.சொர்ணம் பிள்ளை சன்ஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.3063 / 2020 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் தமிழ்நாடு நகராட்சி விதி எண்.15 ன் கீழ் இப் பணியை மேற்கொள்ள ஒப்புதல் வேண்டப்படுகின்றது. இப் பணிக்கான செலவுத் தொகையினை வருவாய் நிதி 2020-21 லிருந்து மேற்கொள்ளவும், COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதி கூடுதலாக பெறப்படின் அந் நிதியிலிருந்து ஷை தொகையை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4) இப் பணியினை மேற்கொள்ள ரூ.35000/- க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள பி.எம்.சொர்ணம் பிள்ளை சன்ஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் வசம் பணியினை ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2086 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**17.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகனம் எண். டி.என்.57.3210 க்கு 18.09.2020 ம் தேதியுடன் தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் மீண்டும் ஒரு வருட காலத்திற்கு (2020-2021) தகுதிச்சான்று பெற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண். 5565 / 2020 / இ 3**)

<u>அலுவலக குறிப்பு</u>

1) அனுமதி வழங்கலாம்
2) அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2087 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**18**. திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகனம் எண். டி.என்.57.2186 க்கு 26.09.2020 ம் தேதியுடன் தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் மீண்டும் ஒரு வருட காலத்திற்கு (2020-2021) தகுதிச்சான்று பெற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.55,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 5566 / 2020 / இ 3**)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்: 2088அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

---

**19.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பாதாள சாக்கடைத்திட்டப்பிரிவில், சிப்பம் – I ற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் BMP CONSTRUCTION ஒப்பந்ததாரர் மூலம் பார்க்கப்பட்டு வருகின்றது. இப்பணியின் ஒப்பந்த காலம் 14.12.2019 முதல் 13.12.2020 வரை ஆகும்.

சிப்பம் I ற்கான பணிகளில் கீழ்கண்ட பணிகள் அடங்கும்.

| | |
|---|---|
| கழிவுநீர் குழாயின் நீளம் | - 24.40 கி. மீ. |
| கழிவுநீர் பிரதான குழாயின் நீளம் | - 9.65 கி.மீ, |
| திறவாய் தொட்டிகள் | -995 எண்ணம், |
| வீட்டு இணைப்புகள் | -3296 எண்ணம் |
| கழிவுநீர் உந்து நிலையம் | -2 எண்ணம் |
| கழிவுநீரேற்று நிலையம் | -2 எண்ணம் |

இப்பணி 13.12.2020 உடன் முடிவடைவதால், இப்பணி அத்தியாவிசயப்பணி என்பதால், பணியினை இடைவிடாது மேற்கொள்ள, ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இப்பணிக்கு PWD (2020-2021) விலைவிகித பட்டியலின் படி மதிப்பீடு ரூ. 31 இலட்சத்திற்கு, ஒரு வருடத்திற்கு (14.12.2020 முதல் 13.12.2021) பணி மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சிப்பம் I கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். /2020/இ4)**

<u>அலுவலக குறிப்பு..</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2089 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---